JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **198/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 2** | Prosecution /Defence / Court | |
| Name | சுரேஷ் | Village | NK நகர், சீனாபுரம், துடுப்பதி |
| Husband's Name | ராஜ் | Taluk | பெருந்துறை |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.08.2025**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தறி ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். 10.05.2014ம் தேதியன்று காலை 6.30 மணியளவில் நானும் எனது நண்பரும் வீரணம்பாளையம் தறி ஓட்டுவதற்காக சீனாபுரத்திலிருந்து வீரணம் பாளையம் சென்ற போது UPM ஓட்டல் முன்பு மேற்கிலிருந்து கிழக்காக ஒரு லாரி வந்தது. ஆம்னி வேன் ஓவர் டேக் செய்யும் போது லாரியை கவனிக்காமல் சென்று மோதிவிட்டது. டமார் என்று சத்தம் கேட்டதால் நானும், எனது நண்பரும் சென்று பார்த்தோம். உள்ளே இருந்த நபர்கள் இரத்தகாயங்களுடன் இருந்தார்கள். 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து விபத்தில் அடிப்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அனுப்பு வைத்தோம்.

2) விபத்தை ஏற்படுத்திய ஆம்னி வேன் பதிவு எண் 1689 ஆகும். விபத்தில் அடிப்பட்டவர்கள் சமையல் வேலைக்கு சென்று வந்தவர்கள் என்றும் சென்னிமலையில் இருந்து வந்தவர்கள் என்றும் பின்னிட்டு தெரிந்து கொண்டேன். ஆம்னி வேன்னை ஓட்டிய நபரை அப்போது பார்த்தேன். 12 வருடகங்கள் ஆகிவிட்டதால் தற்போது நினைவில்லை. பெருந்துறை போலிசார் விபத்து சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நாங்கள் பிட்டர் வேலைக்கு சென்றோம். யாருடைய பட்டரைக்கு சென்றோம் என்றால் முத்துசாமி என்பவரின் தறி பட்டறைக்கு சென்றோம். தறி ஓட்டும் வேலையும், பிட்டர் வேலையும் வேறு வேறு என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் பிட்டர் வேலை செய்வதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், சரவணனும் மெயின் ரோட்டில் சைக்கிளில் சென்றோம் என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட லாரி எங்களுக்கு முன்பாக சென்றது என்றால் சரிதான். அதனால் சத்தம் கேட்டு தான் விபத்து நடந்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான். லாரி எனக்கு முன்பாக சென்றதால் லாரிக்கு முன்புறம் என்ன நடந்தது என்று நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) போலிசார் விசாரிக்கும் போது லாரியை முந்திக்கொண்டு வேன் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். விபத்து நடந்து 10 நிமிடத்தில் போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் பெண் உதவி ஆய்வாளரும் வந்துவிட்டார் என்றால் சரிதான். அவர்கள் தான் அடிப்பட்டவர்களை ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். போலிசார் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களை பார்த்தார்கள் என்றால் சரிதான். புகைபடம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தை பார்த்து எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடமும் சரவணனிடமும் கையொழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். 6.30 – 7.00 மணிக்கும் போலிசார் விசாரித்து முடித்துவிட்டு சம்மந்தப்பட்ட வாகனங்களை காவல் நிலையத்திற்கு எடுத்து வந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

3) விபத்து நடந்தவுடன் லாரி டிரைவர் இறங்கி ஓடிவிட்டார் என்றால் சரிதான். வாகனங்களை எடுத்து சென்றபிறகு என்னையும், சரவணனையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் அடிப்பட்ட நபர்களின் பெயர் எனக்கு தெரியாததால் அவர்கள் பெயர்கள் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு நான் காவல் நிலையத்திற்கோ, சம்பவ இடத்திற்கோ வரவில்லை என்றால் சரிதான். நானும் சரவணனும் தறிபட்டறைக்கு வந்ததாக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. யாரும் சாட்சி சொல்ல முன் வராததால் என்னையும், சரவணனையும் பார்த்த சாட்சியாக பொய்யாக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **198/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | வடிவேல் | Village | மாரியம்மன் கோயில் தெரு, உப்பிலிபாளையம் ரோடு, சென்னிமலை |
| தகப்பனார் பெயர் | பொன்னுசாமி | Taluk | பெருந்துறை |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.08.2025**

**முதல் விசாரணை**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு டிவைராக வேலை பார்த்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன் சரஸ்வதி எனது தாயார் ஆவார். 10.05.2014ம் தேதி நான் சென்னிமலையில் இருந்தபோது மருத்துவமனையில் இருந்து என்னை அழைத்து என் தாயாருக்கு விபத்து ஏற்பட்டிருப்பதாக தகவல் சொன்னார்கள். நான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் சென்று பார்க்கும்போது என் தாயார் இறந்துவிட்டார். பின்னர் பெருந்துறை போலிசார் என் தாயார் சரஸ்வதி பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார். நான் உடனிருந்து என் தாயார் சரஸ்வதி பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பெருந்துறை போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்னை பிரேத விசாரணையின் போது விசாரித்த பெண் உதவி ஆய்வாளர் எனக்கு தகவல் சொல்லி நான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).